எங்கே கொண்டு செல்லப்படுகிறார்கள் என்று தெரியாமல் கைது செய்திருப்பது அப்பட்டமான சட்ட விரோதம்!

அபிஜீத் தீப்கே எங்கே? நேஹா போரா எங்கே?

உடனே விடுவிக்க கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, அக்.18–

எங்கே கொண்டு செல்லப்படுகிறார்கள் என்பதைக் கூட தெரிவிக்காமல், கரப்பான்பூச்சி கட்சியின் அபிஜீத் தீப்கே மற்றும் நேஹா போரா ஆகியோரை கைது செய்திருப்பது அப்பட்டமான சட்டவிரோதம் என்றும் மனித நேயத்துக்கு எதிரானது என்றும் குறிப்பிட்டு, சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ள கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அவ்விருவரையும் உடனே விடுவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:



அபிஜீத் தீப்கே எங்கே? நேஹா போரா எங்கே?


அவர்கள் எங்கு கொண்டு செல்லப்படுகிறார்கள் என்பதைக்கூடத் தெரிவிக்காமல் கைது செய்து வைத்திருப்பது அப்பட்டமான சட்டவிரோதச் செயலும், மனிதநேயத்துக்கு எதிரானதும் ஆகும்.

ஒன்றிய அரசு அவர்கள் இருவரையும் உடனடியாக விடுவிக்க வேண்டும். அமைதியான போராட்டங்களை ஒடுக்குவதை நிறுத்த வேண்டும். போராட்டத்தை ஒடுக்க நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் அதனை மேலும் வலுப்படுத்தவே செய்யும்.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரைப் பதவி நீக்கம் செய்வதைத் தவிர ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு வேறு வழியில்லை.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்யா; கோவையில் பெரியார் அறிவுலகத்தை முதலமைச்சர் விஜய் திறந்து வச்சிருக்காரே.. தி.மு.க. ஆட்சியில் கட்டியது தானே அது!

போண்டி : **ஆமாய்யா; அவங்க திறக்கிற திட்டம் எல்லாமே தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றியது தான். ஒன்னு கவனிச்சியா? தந்தை பெரியாரை கொள்கைத் தலைவராகச் சொல்ற த.வெ.க. ஒருபக்கம் அவர் பேர்ல அறிவுலகம் திறக்கறாங்க..**

இன்னொரு பக்கம், ஆயுத பூஜையை அரசு அலுவலகங்கள் எளிமையாகக் கொண்டாடலாம்ன்னு மதச்சார்பின்மைக்கு எதிராக ஜி.ஓ.போடறாங்க. என்ன பண்றது? கேக்க ஆளில்லை.

ஆளும் கட்சியின் பவர் சென்டர்களுக்கு பங்கு கொடுப்பதால் தைரியமாக கடத்துகிறாரா? – 135 கிலோ எடையுள்ள

பல கோடி மதிப்புள்ள போதைப் பொருள் கடத்த முயன்ற த.வெ.க. நிர்வாகி கைது!

'டம்மி' முதலமைச்சரின் போதைப் பொருள் ஒழிப்பு லட்சணம் இதுதானா என்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, அக். 18–

பல கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப் பொருள் 135 கிலோ கடத்த முயன்ற த.வெ.க. நிர்வாகி கைதாகியுள்ளார். ஆளும் கட்சியின் பவர் சென்டர்களுக்கு பங்கு கொடுப்பதால் தைரியமாக கடத்துகிறாரா எனவும் டம்மி முதலமைச்சரின் போதைப் பொருள் ஒழிப்பு இலட்சணம் இதுதானா எனவும் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:-

தமிழ்நாட்டில் இது வரை இல்லாத அளவுக்கு வேதாரண்யத்தில் பல நூறு கோடி ரூபாய் மதிப்பிலான சுமார் 135 கிலோ மெத்தபெட்டமைன் போதைப்பொருளை இலங்கைக்குக் கடத்த முயன்ற த.வெ.க. நிர்வாகி பூபாலனை ஒன்றிய அரசின் வருவாய் புலனாய்வுத்துறை கைது செய்துள்ளது பெரும் அதிர்ச்சி அளிக்கிறது.

முதல்வர் சொல்வதை விடு DRUGS – ஐ எடு!

'முதலமைச்சர் DRUGS-ஐ விடு SPORTS-ஐ எடு' என்று மாரத்தான் ஓடினால், அவரது கட்சிக்காரர்கள், 'முதலமைச்சர் சொல்வதை விடு, DRUGS-ஐ எடு' என்று செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

கைது செய்யப்பட்ட பூபாலனிடம் இருந்து பல லட்சம் ரூபாய் பணமும் கைப்பற்றப்பட்டுள்ள



நிலையில், அவர் ECR வழியாக பயணித்து வந்ததாகவும் தெரிய வந்துள்ளது.

அப்படியென்றால், அவருடன் தொடர்பில் இருந்தவர்கள் யார்? யார் யாரிடமிருந்து போதைப்பொருளை பெற்றார்? இலங்கை தவிர்த்து வேறு எங்கெல்லாம் விற்பனை செய்ய இருந்தார்?

ஆளுங்கட்சியின் பவர் சென்டர்களுக்கு பங்கு கொடுப்பதால் தான் இவ்வளவு தைரியமாக போதைப்பொருள் கடத்துகிறாரா?

ஒன்றிய அரசு விசாரணை நடத்த வேண்டும்!

ஆட்சிக்கு வந்ததும் போதைப்பொருளை ஒழிப்பேன் என்று சொன்ன DUMMY முதலமைச்சர், தன் கட்சிக்காரர்களையே போதைப் பொருள் கடத்தவிட்டு வேடிக்கைப் பார்ப்பது தான் அவரது போதைப் பொருள் ஒழிப்பு லட்சணமா?

இந்த வழக்கின் முழுப் பின்னணியையும் ஆராய்ந்து இதன் பின்னால் உள்ள அனைவரது மீதும் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கும் வகையில் ஒன்றிய அரசின் NIA, ED போன்ற அமைப்புகள் தீவிர விசாரணை நடத்திட வேண்டும்.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

ஆம்னி பேருந்துகளில் 8 மடங்கு கொள்ளை – ஸ்டிக்கர் ஒட்டத் தெரிந்த

த.வெ.க. அரசுக்கு கட்டணக் கொள்ளையை தடுக்கத் தெரியாதா?

கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு கண்டன அறிக்கை!

சென்னை, அக். 18–

கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு வெளியிட்டுள்ள கண்டன அறிக்கை வருமாறு:

ஆயுதபூஜை தொடர் விடுமுறையை பயன்படுத்தி ஆம்னி பஸ்கள் அடிக்கும் பல மடங்கு கட்டணக் கொள்ளையை தடுக்காமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது த.வெ.க. அரசு.

பண்டிகைக் காலங்கள் என்றாலே, சாமானிய மக்களின் மகிழ்ச்சியை விட தனியார் பஸ் உரிமையாளர்களுக்குத்தான் பெரு மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆயுதபூஜை தொடர் விடுமுறையில் சென்னையில் இருந்து சொந்த ஊர்களுக்குச் செல்லத் திட்டமிட்ட சாமானிய மக்களிடம் ஆம்னி பஸ் கட்டணக் கொள்ளையை தடுக்க முடியாமல் விஜய் அரசு திணறிக் கொண்டிருக்கிறது.

எந்தவித திட்டமிடலும் இல்லாமல் திராவிட மாடல் ஆட்சியின் விடியல் பயணத்தை மாற்றி, விரிவாக்கம் செய்து வெற்றிப் பயணம் என ஸ்டிக்கர் ஒட்டி, ஆட்டோ டிரைவர்களையும், தனியார் பேருந்து உரிமையாளர்களையும் ஒரு பக்கத்தில் நட்டத்தில் விட்டு இன்னொரு பக்கம் பண்டிகை காலத்தில் சாமானிய மக்களிடம் இருந்து அறுவடை செய்ய வழியும் காட்டுகிறார்கள். இதனையெல்லாம் முன்கூட்டியே கணித்து, நடவடிக்கை எடுக்க வேண்டிய விஜய் அரசு, ஸ்டிக்கர் ஒட்டுவதில் தீவிரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நிர்வாகம் என்றால் என்னவென்றே இவர்களுக்குத் தெரியவில்லை.



விசில் புரட்சியின் ஆட்சியில் 12 மடங்கு அதிகக் கட்டணம்!

பண்டிகை காலங்களில் வழக்கமாக இரண்டு அல்லது மூன்று மடங்கு கட்டண உயர்வு இருப்பதை கேள்விப் பட்டிருப்போம். ஆனால், இப்போது 8 மடங்கு கட்டண உயர்வு என்பதெல்லாம் விசில் புரட்சி ஆட்சியில்தான் பார்க்கிறோம். அரசுப் பேருந்து கட்டணத்தோடு ஒப்பிட்டால், இது 12 மடங்கு அதிகம். இந்தப் பகிரங்கமான சுரண்டலை இதுவரை தமிழ்நாடு பார்த்ததில்லை. மாதாந்திரச் சம்பளத்தை நம்பி வாழும் நடுத்தரக் குடும்பம், பண்டிகைக்கு ஊருக்குச் செல்லவே முடியாத நிலையே ஏற்படுத்திவிட்டார்கள். எப்படியாவது ஊருக்குப் போக வேண்டும் என நினைப்பவர்கள் தங்களின் ஒரு மாதச் சேமிப்பை இழந்துதான் போக வேண்டும். அப்படி பயணிப்பவர்கள் எல்லோரும் இந்த ஆட்சியை கழுவி ஊற்றுவதை கோயம்பேட்டிலும் ஆலந்தூரிலும் கிளாம்பாக்கத்திலும் போக்குவரத்துத்துறை அமைச்சர் பார்த்தால் ஆயிரம் ரீல்ஸ்கள் எடுக்கலாம்.

கொள்ளை அடிப்பவர்கள் மீது அமைச்சர் என்ன நடவடிக்கை எடுத்தார்!

அரசு நிர்ணயித்த கட்டணக் கட்டுப்பாடுகளைக் காற்றில் பறக்கவிட்டுவிட்டு, பண்டிகைக் காலத்தில் கொள்ளை அடிப்பவர்கள் மீது போக்குவரத்துத் துறை அமைச்சர் என்ன நடவடிக்கை எடுத்தார்? அரசு மோட்டார் வாகனச் சட்டங்களும், விதிகளும் யாருக்காக இருக்கின்றன? போக்குவரத்துத் துறை என ஒன்று செயல்படுகிறதா? கட்டணக் கொள்ளையை தொரிவிக்க 24 மணி நேர உதவி எண்ணை விளம்பரப்படுத்தினீர்களே.. அப்படி நடவடிக்கை எடுத்ததற்கான ஆதாரத்தை வெளியிட முடியுமா?

மக்களின் பண்டிகை மகிழ்ச்சியை விலை பேசுவர்களுக்கு "கமிஷன் வாங்கிக்கொண்டு" த.வெ.க. அரசு துணை போகிறதா என்று மக்கள் கேட்கத் தொடங்கிவிட்டார்கள்.

விநாயகர் சதுர்த்தி விடுமுறையின் போது 'அரசு பஸ்கள் இல்லை. கட்டணக் கொள்ளை' என புகார்கள் கிளம்பியதும் அதை மறைக்க இன்ஸ்டாகிராம் இன்ஃப்ளூயன்சர்களை கிளம்பாக்கத்தில் ஒரே நேரத்தில் இறக்கிவிட்டு ரீல்ஸ்கள் போட்டீர்களே... அது போல ஆயுதபூஜை விடுமுறையிலும் பி.ஆர். ஸ்டண்ட் நாடகம் நடத்த ஜடியா எதுவும் வைத்திருக்கிறீர்களா?

கட்டணக் கொள்ளையை தடுத்த திராவிட மாடல் அரசு!

தொடர் விடுமுறை காலங்களில் ஆம்னி பேருந்துகளின் கட்டணக் கொள்ளையைத் தடுக்க, திராவிட மாடல் ஆட்சியில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- 30க்கும் மேற்பட்ட வட்டாரப் போக்குவரத்துத் துறை (RTO) சிறப்புக் கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டன. சென்னை கோயம்புத்தூர், மதுரை, திருச்சி நகரங்களில் அதிகாரிகள் 24 மணி நேரமும் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.
- அதிகக் கட்டணம் வசூலித்த ஆம்னி பேருந்துகளுக்கு லட்சக்கணக்கில் அபராதம் விதிக்கப்பட்டது.
- ஆன்லைன் முன்பதிவு செயலிகளில் பண்டிகை நாட்களில் கட்டணங்கள் பல மடங்கு உயர்த்தப்படுவதை கண்காணித்தோம்.
- நீதிமன்ற உத்தரவுகளின் படி, ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் தங்களின் அதிகபட்ச கட்டணப் பட்டியலை இணைய தளத்தில் அதிகாரப்பூர்வமாக வெளியிட அறிவுறுத்தப்பட்டனர். அதைத் தாண்டி வசூலிப்பவர்கள் மீது நடவடிக்கை பாய்ந்தது.

குதிரை பேரத்தில் காட்டும் வேகத்தை கட்டணக் கொள்ளையை தடுப்பதில் காட்டவும்!

- கூடுதல் அரசு பேருந்துகளை இயக்கி நடுத்தர மக்கள் தனியார் பேருந்துகளைச் சார்ந்து ஏமாறுவதைப் பெரும அளவில் குறைத்தோம்.

இப்படியான எந்த நடவடிக்கையையும் த.வெ.க. அரசு செய்யவில்லை. குதிரை பேரத்தில் காட்டும் வேகத்தை ஆம்னி பஸ் கட்டணக் கொள்ளையை தடுப்பதற்கு காட்டவில்லை. பஸ்சில் கேட்கும் விசில் சத்தம் எல்லாம் மக்களின் காதுகளில் நாராசமாகத்தான் ஒலிக்கின்றன.

இவ்வாறு கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள் வாக்களித்தபடி சட்டமன்றத்தில் சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட வேண்டும்:

மதம் மாறியவர்களின் சமூகநீதிக்கான உரிமைகள் பறிக்கப்படக் கூடாது!

மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா அறிக்கை!

சென்னை, அக்.18–

மதம் மாறியவர்களின் சமூக நீதிக்கான உரிமைகள் பறிக்கப்படக் கூடாது! – அமைச்சர்கள் வாக்களித்தபடி சட்டமன்றத்தைக் கூட்டி சட்டதிருத்தம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று மனிதநேய மக்கள் கட்சியின் தலைவரும் நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினருமான பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவர் மதம் மாறியதன் காரணமாக, அவர் இதற்கு முன்பு அனுபவித்த சமூகப் பின் தங்கிய நிலையின் அடிப்படையில் இடஒதுக்கீட்டுப் பயன்களைப் பெற முடியாது என்று உச்சநீதிமன்றம் இன்று அளித்துள்ள தீர்ப்பு, தமிழகத்தின் சமூகநீதி வரலாற்றையும், அரசியல் சட்டத்தின் அடிப்படைகளையும் புறக்கணிக்கும் வருத்தமளிக்கும் தீர்ப்பாகும்.

தமிழ்நாடு அரசு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC), மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (MBC), சீர்மரபினர் (DNC) மற்றும் பட்டியல் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் இஸ்லாத்திற்கு மதம் மாறிய பின்னர், உரிய நிபந்தனைகளின் அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட முஸ்லிம் வகுப்பினருக்கான (BCM) சான்றிதழைப் பெற வழி வகுக்கும் அரசாணையை 2024 மார்ச் மாதம் வெளியிட்டது. இந்த அரசாணையைச் சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்த நிலையில், அதனை எதிர்த்து தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த மேல்முறையீட்டை உச்சநீதிமன்றம் தற்போது தள்ளுபடி செய்துள்ளது.



இஸ்லாமிய மார்க்கத்தை தங்களது வாழ்வில் நெறியாக ஏற்றுக்கொண்ட பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, வகுப்புகளை சேர்ந்தவர்களுக்கு பி.சி.எம். இடஒதுக்கீடு வழங்கப்படாமல் அவர்கள் இதரர் என்று வகைப்படுத்தப்பட்டனர்.

கடந்த 22.4.2022, 11.3.2023 மற்றும் 14.2.2024 ஆகிய நாட்களில் சட்டமன்றப் பேரவையிலும், அதேபோல் கடந்த 22.9.2022 தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் அவர்களை நேரில் சந்தித்தும் இஸ்லாமிய மார்க்கத்தை தழுவியர்களுக்கு பி.சி.எம். வகுப்பு சான்றிதழ் வழங்க வேண்டியதின் அவசியம் குறித்து மனிதநேய மக்கள் கட்சி சார்பில் வலியுறுத்தினேன்.

இதனை தொடர்ந்து 15.2.2024 அன்று ஆளுநர் உரைக்கு பதிலளிக்கும் உரையில் எனது கோரிக்கையை குறிப்பிட்டு அதற்கு பதிலளித்த அன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சட்டவல்லுனர்களுடன் கலந்து ஆலோசித்து நான் வைத்துள்ள கோரிக்கை நிறைவேற்றப்படும் என பதிலளித்தார்கள்.

இந்த அறிவிப்பின் அடிப்படையில் கடந்த மார்ச் 9, 2024ல் அரசாணை வெளியிடப்பட்டது.

இந்த அரசாணையின் உதவியால் தமிழ்நாட்டில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டுள்ள ஆயிரக்கணக்கான முஸ்லிம்களுக்கு பி.சி.எம். வகுப்பு சான்றிதழ் கிடைக்க மு.க.ஸ்டாலின் ஆட்சி வழிவகுத்தது.

மதம் மாறிய பிறகும் பிற்படுத்தப்பட்ட முஸ்லிம் (பிசிஎம்) என்ற உரிமை தொடரும் என்று இந்த அரசாணை தொடர்பான வழக்கில் சென்னை உயர்நீதிமன்றத்தில் கடந்த அக்டோபர் 25ல் தீர்ப்பு வழங்கிய நீதிபதியரசர்கள் எம்.எஸ்.ரமேஷ் மற்றும் ஆர்.சக்திவேல் அமர்வு (W.A.No.2813 of 2021), பிற்படுத்தப்பட்ட இந்து சமூகத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் இஸ்லாத்திற்கு மாறிய பிறகு பெற்ற பிசிஎம் சான்றிதழ் செல்லுபடியாகும் என்று குறிப்பிட்டார்கள். அந்த தீர்ப்பில், பிசிஎம் அந்தஸ்து புதியதாக வழங்கப்பட்டது அல்ல; ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட சமூகநீதிசார் உரிமை என்பதை நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது. மேலும், "பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்" என்பது தமிழ்நாடு சட்டம் 45/1994ன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சமூகப் பிரிவு என்பதை நீதிமன்றமே தெளிவுபடுத்தியுள்ளது.

இந்த நிலையில், இஸ்லாத்தை தழுவியவர்களுக்கு 3.5% பிசிஎம் இடஒதுக்கீட்டை செல்லாது என சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை அமர்வில் நீதியரசர்கள் ஜி.ஆர். சுவாமிநாதன் மற்றும் பி.பி. பாலாஜி கடந்த ஜூன் 25, 2026 அன்று தீர்ப்பு வழங்கினார்கள்.

இந்த தீர்ப்பு தமிழ்நாட்டில் த.வெ.க. அரசு பொறுப்பேற்ற பிறகு அளிக்கப்பட்டதாகும்.

இதனை தொடரந்து உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு மேல்முறையீடு செய்தது. இந்த வழக்கில் தான் இன்று உச்சநீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தொடர்ச்சியாக இப்பிரச்னைக்கு தீர்வு 2007ல் பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்களுக்கு 3.5 இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தில் சிறிய திருத்தம் செய்யும் சட்டத்திருத்தம் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமென்று சட்டமன்றத்தில் நான் கோரிக்கை வைத்தேன்.

சட்டமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் தொடக்கத்தில் சட்டத்துறை அமைச்சர் மற்றும் பொதுபணித்துறை அமைச்சரிடமும் நானும் பல்வேறு முஸ்லிம் அமைப்புகள் கட்சிகளை உள்ளடக்கிய கூட்டமைப்பின் சார்பாக நேரில் கோரிக்கை வைத்தோம். எத்தகைய திருத்தம் செய்யப்பட வேண்டுமென்ற வரைவு திருத்த சட்ட முன்வடிவும் அமைச்சர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க சமர்பிக்கப்பட்டது.

இருப்பினும் முஸ்லிம் சமூக தலைவர்களிடம் வாக்களித்த படி சட்டத் திருத்தம் கொண்டு வரப்படவில்லை.

தற்போது உச்சநீதிமன்ற தீர்ப்பு வந்துள்ள சூழலில் உடனடியாக சட்டமன்றத்தின் சிறப்பு கூட்டத்தை கூட்டி சட்டத் திருத்தம் நிறைவேற்றி சமூக நீதியை த.வெ.க. அரசு நிலை நாட்டப்பட்ட முன்வர வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

